# இடைக்கழிநாடு பேரூராட்சி

## செங்கல்பட்டு மாவட்டம்

<u>ந.க.எண். 356 / 2021</u> <u>நாள்.16.05.2022</u>

## <u>மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு</u>

செங்கல்பட்டு மாவட்டம், இடைக்கழிநாடு பேரூராட்சியில் **2021–2022** –ம் ஆண்டின் இயக்கம் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் பின்வரும் வேலையை செய்வதற்கு கீழ்கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு **01.06.2022** –ம் தேதி **புதன் கிழமை** பிற்பகல் **3.00** மணி வரை பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் ஒப்பந்தபுள்ளிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே பிற்பகல் **3.30** மணிக்கு வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி நமுனா படிவம் கீழ்குறிப்பிட்டுள்ள விலையில் **31.05.2022** ம் தேதி பிற்பகல் **3.00** மணி வரை அலுவலக நாட்களில் கிடைக்கும். வைப்புத் தொகை **01.06.2022** அன்று பிற்பகல் **3.00** மணிக்குள் செலுத்தப்பட வேண்டும். மேற்படி ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **16.05.2022** ம் தேதி முதல் கீழ்கண்ட இணைய தளத்தில் இருந்து கட்டணம் இல்லாமல் எடுத்துக் கொள்ளலாம். மேற்படி படிவத்தில் இல்லாத ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. www.tenders.tn.gov.in

மேலும், வைப்புத் தொகை செலுத்திய ரசீது ஒப்பந்தப் புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த இதர நிபந்தனைகள் மற்றும் விவரங்களை பேரூராட்சி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

### 2021–2022 –ம் ஆண்டின் இயக்கம் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி

| **வ. எண்.** | வேலையின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ. லட்சத்தில் | காப்புறுதி தொகை மதிப்பீட்டில் 1 % | ஒப்பந்தப்புள்ளி நமுனா விலை | பணி முடிக்கும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | இடைக்கழிநாடு பேரூராட்சிக்குட்பட்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி **1.** வார்டு எண். **3** முதலியார் குப்பம் ஆரம்பப் பள்ளி , **2.** வார்டு எண். **7** விளம்பூர் கருமாரியம்மன் கோயில் அருகில் OHT **3.** வார்டு எண். **8** கடப்பாக்கம் OHT **4.** வார்டு எண். **10** ஆலம்பரைக்குப்பம் ஊத்துக்காட்டம்மன் OHT **5.** வார்டு எண்.**17** கப்பிவாக்கம் ஆரம்பப் பள்ளி OHT **6.** வார்டு எண். **18** சேம்புலிபுரம் ஆரம்பப் பள்ளி OHT, **7.** கோட்டைக்காடு காசிப்பாட்டை சாலை முதல் பிடிஎஸ் கடை அருகில் உள்ள OHT **8.**வார்டு எண். **15** கரும்பாக்கம் மேற்கு OHT **9.** வார்டு எண்.**6** விளம்பூர் வினாயகர் கோயில் அருகில் OHT ஆகியவை பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணி | **15.00** | **15000.00** | **6680/–** | **60** நாட்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | இடைக்கழிநாடு பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13 கோட்டைக்காடு காசிப்பாட்டை சாலை, 2. வார்டு எண். 20 விளம்பூர் 3. வார்டு எண்.2 ஓதியூர் இசிஆர் 4. வார்டு எண். 1 நைனார்குப்பம் இசிஆர் மேற்கு 5. வார்டு எண்.12 சாயிபாபா கோயில் இணைப்பு முதல் இசிஆர் 6. வார்டு எண். 12 ஔச்டி இணைப்பு முதல் காசிப்பாட்டை இணைப்பு சாலை ஆகிய இடங்களில் உள்ள பைப்லைன் மாற்றி அமைத்தல் | 1000000.00 | 10000.00 | 6680/. | 60 நாட்கள் |

<u>**நிபந்தனைகள்**</u>

1. பேரூராட்சியில் நீண்ட காலமாக நிலுவை பணிகள் உள்ள ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.
2. ஒப்பந்தப்புள்ளிகள் மூடி முத்திரையிட்ட உறையில் வரிசை எண், வேலையின் பெயர் மற்றும் ஒப்பந்ததாரர் பெயர், முகவரி தெளிவாக எழுதி சமர்ப்பித்தல் வேண்டும்.
3. இப்பணிக்கு அதன் எதிரில் குறிப்பிட்டுள்ள வைப்புத் தொகையில் 1 சதவீதம் ஒப்பந்தப்புள்ளி அளிக்கும்போது செலுத்தப்படவேண்டும். மீதம் உள்ள 4 சதவீதம் பணி முடித்து பட்டியல் வழங்கும்போது பிடித்தம் செய்யப்படும்.
4. மேற்க்குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் வைப்புத் தொகை ரொக்கமாக செலுத்தி இரசீது பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்படவேண்டும். காலம் கடந்த பிறகு வைப்புத்தொகை பெற்றுக்கொள்ளப்படமாட்டாது.
5. ஒப்பந்தப்புள்ளியில் அடித்தல் திருத்தல் இருந்தால் அதனை சம்மந்தப்பட்டட ஒப்பந்ததாரர் கையொப்பமிட்டு உறுதி செய்தல் வேண்டும். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 1.6.2022 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு பிறகு ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படமாட்டாது.
6. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை நிராகரிக்கவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ செயல் அலுவலர் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.
7. பணி துவங்குவதற்கு முன்னர் ரூ.20/– மதிப்புள்ள முத்திரைத் தாளில் இப்பேரூராட்சியுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்.
8. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் தேதியை தள்ளிவைக்கவோ அல்லது ரத்து செய்யவோ செயல் அலுவலர் அவர்களுக்கு அதிகாரம் உண்டு. அதனால் ஏற்ப்படும் இழப்பிற்கு நிர்வாகம் பொறுப்பாகாது
9. ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ளும்போது, ஒப்பந்ததாரரின் நிதி நிலைமை பொருளாதார நிலை குறித்த அறிக்கையும் சமர்ப்பிக்க வேண்டும்.
10. தற்போதைய 2021–2022 –ம் ஆண்டு வருமான வரி சான்று மற்றும்
11. விற்பனை வரி பதிவு மற்றும் சான்று இணைக்கப்பட வேண்டும்.
12. ஒப்பந்ததாரர் இப்பேரூராட்சிக்கு செலுத்தவேண்டிய 2021–2022 –ம் ஆண்டு சொத்து வரி, தொழில் வரி, கடைவாடகை மற்றும் இதர குத்தகை தொகை நாளது மாதம் வரை கட்டிய ரசீது இணைக்கப்படவேண்டும்.
13. ஒப்பந்ததாரரால் செய்யப்படும் பணியில் பயன்படுத்தப்படும் பொருட்களுக்கு தர நிர்ணய சான்று கோரும் பட்சத்தில் பெற்றுத் தரப்பட வேண்டும்.
14. இப்பேரூராட்சியில் ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொள்வதற்காக மூன்று முறை ஒப்பந்த நமுனா பெற்று ஒப்பந்தத்தில் கலந்து கொள்ளாத ஒப்பந்ததாரர்களும் மற்றும் மூன்று முறை ஒப்பந்தப்புள்ளியிலேயே கலந்து கொள்ளாத ஒப்பந்ததாரர்களும் மறு அறிவிப்பின்றி ஒப்பந்தாரர் பதிவு ரத்துசெய்யப்படும்.

15. இப்பேரூராட்சியில் பணியினை எடுத்து பணி முடிக்காமல் நிலுவையில் உள்ள ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தப்புள்ளி நமுனா வழங்கப்படமாட்டாது/அன்னாருடைய ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்படமாட்டாது.
16. பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களின் சொத்து மதிப்பிற்கேற்ப கீழ்க்கண்டவாறு தரம் பரிசீலித்து ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படும்.

வகுப்பு 1 ரூ. 25.00 இலட்சத்திற்கு மேல்
வகுப்பு 2 ரூ. 25.00 இலட்சம் வரை,
வகுப்பு 3 ரூ. 10.00 இலட்சம் வரை
வகுப்பு 4 ரூ. 5.00 இலட்சம் வரை,
வகுப்பு 5 ரூ. 2.00 இலட்சம் வரை.

அரசாணை எண். 1729/பொ.ப.து. நாள். 29.12.1992.

17. பணி செய்து முடித்தவுடன் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் அவர்களால் அளவுகள் மேலளவுகள் செய்து அளவு புத்தகத்துடன் பட்டியல் தயாரித்த பின்னர் தொகை உரிய பிடித்தங்கள் போக மீதம் கோடிட்ட காசோலை மூலம் தொகை வழங்கப்படும்.
18. ஒப்பந்தப்புள்ளிகள் குறித்து பேரூராட்சி மன்ற முடிவே இறுதியானதாகும்.
19. பணிகளுக்கு வேலை உத்திரவு பெறப்பட்டு, எதிரே குறிப்பிட்டுள்ள காலகெடுவிற்குள் பணிகள் செய்து முடிக்கப்பட வேண்டும். தவறினால் இப்பேரூராட்சியில் விதிக்கப்படும் அபராதத்திற்கும் மற்றும் இதர செயல்பாட்டிற்கும் ஒப்பந்ததாரர் கட்டுப்படவேண்டும்.
20. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் வேலைகள் நடைபெறும் போது இயற்கை இடர்பாடுகள் மற்றும் விபத்துக்கள் நடைபெறும் போது அதற்கான முழுப் பொறுப்பிற்கும் ஒப்பந்ததாரரே சார்ந்தவராவார். அதற்கான காப்புறுதி செய்து கொள்ள ஒப்பந்ததாரரே கடமைப்பட்டவராவார். எனவே அதற்கான சம்மதம் தெரிவிக்கப்பட வேண்டும்.
21. பணிகள் துவங்குவதற்கு முன்னர், பணி நடைபெறும் சமயத்தில் மற்றும் பணி முடிவுற்றவுடன் ஆகிய 3 நிலைகளில் ஒவ்வொரு பணிக்கும் புகைப்படம் எடுக்கப்பட வேண்டும்.

செயல் அலுவலர்,
இடைக்கழிநாடு பேரூராட்சி.
செங்கல்பட்டு மாவட்டம்.

பெறுநர் :—

பதிவுபெற்ற அனைத்து ஒப்பந்ததாரர்கள்.

நகல் :—

1. மாவட்ட ஆட்சித் தலைவர், செங்கல்பட்டு மாவட்டம் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர், அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3. மாவட்ட கண்காணிப்பாளர் காஞ்சிபுரம் அவர்களின் தகவலுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
4. சட்ட மன்ற உறுப்பினர் செய்யூர் தொகுதி அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
5. உதவி செயற்பொறியாளர் (பேரூராட்சிகள்), காஞ்சிபுரம் மண்டலம் அவர்களின் தகவலுக்காக.
6. உதவி பொறியாளர், மாமல்லபுரம் பேரூராட்சி.
7. செயல் அலுவலர், மாமல்லபுரம், அச்சிறுப்பாக்கம் மற்றும் கருங்குழி பேரூராட்சிகளின் விளம்பர பலகையில் விளம்பரம் செய்ய.
8. அலுவலக விளம்பர பலகைக்கு.
9. கோப்புக்கு.